## சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

## கணிதம்

**தரம் 10** **வாரம் 41**

**அலகு : வட்டத்தின் நாண்கள்**

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- வட்டமொன்றை கடதாசியில் வரைந்து வெட்டி அதன் மையத்தை O எனப் பெயரிடுக.
- அக்கடதாசியை விட்டம் அல்லாத நாண் ஒன்று பெறக்கூடிய விதத்தில் மடித்து, அம்மடிப்பைத் தெளிவாக வரைந்து இரு அந்தங்களையும் A, B எனக் குறிக்க.
- A, B யின் நடுப்புள்ளியைப் பொருத்தமான விதத்தில் குறித்து அதனை P எனக் குறிக்குக.
- புள்ளி P யையும் வட்டத்தின் மையம் O வையும் இணைக்குக.
- OPA, OPB கோணங்களைப் பொருத்தமான முறையில் பரீட்சித்துப் பார்க்க.
- OPA, OPB கோணங்களின் பெறுமானங்கள் பற்றி நீங்கள் பெற்ற பெறுபேறுகள் உண்மையாகும் என வேறு வழிகளில் உறுதிப்படுத்துக.
- அதனைக் கொண்டு கீழே உள்ள வாக்கியத்தின் இடைவெளிகளை நிரப்புக.
- வட்டமொன்றின் நாணின் நடுப்புள்ளியை மையத்தோடு இணைக்கும்
- கோடு அந்நாணிற்குச் ......................................
- இவ்வாக்கியத்தினை உமது பயிற்சிக்கொப்பியில் எழுதிக்கொண்டு அதற்குப் பொருத்தமான உருவையும் வரைக.
- உமது பயிற்சிக்கொப்பியில் வரையப்பட்ட உருவில் OA, OB என்பன இணைத்துப் பெறப்படும் முக்கோணிகள் இரண்டும் எவ்வகை முக்கோணிகள் என ஆராய்க.
- AB இன் நீளம் 6 cm உம், Ơ இன் நீளம் 4 cm உம் ஆனால் அவ்வுருவில்
  - AP இன் நீளம்
  - BP இன் நீளம்
  - வட்டத்தின் ஆரை

  என்பவற்றைக் காண்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

ethaksalawa : https://youtu.be/b_9uESNw1tE

**Youtube : https://www.youtube.com/watch?v=x1TN63zDVpg**

**மேலதிக புத்தகங்கள் / சஞ்சிகைகள் :**

**இப்பாடம் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

- வட்டத்தின் நாண் ஒன்றின் நடுப்புள்ளியை மையத்துடன் இணைக்கும் நேர்க்கோடு அந்நாணுக்குச் செங்குத்தாகும் எனும் தேற்றத்தை அறிந்து கொள்வார்.
- வட்டத்தின் நாண் ஒன்றின் நடுப்புள்ளியை மையத்துடன் இணைக்கும் நேர்க்கோடு
- அந்நாணுக்குச் செங்குத்தாகும் எனும் தேற்றத்தைப் பயன்படுத்தி கணிதச்செய்கைகளை மேற்கொள்வார்
- வட்டத்தின் நாண் ஒன்றின் நடுப்புள்ளியை மையத்துடன் இணைக்கும் நேர்க்கோடு அந்நாணுக்குச் செங்குத்தாகும் எனும் தேற்றத்தைப் பயன்படுத்தி அனுமானங்களை நிறுவுவார்.
- வட்டத்தின் நாண் ஒன்றின் நடுப்புள்ளியை மையத்துடன் இணைக்கும் நேர்க்கோடு அந்நாணுக்குச் செங்குத்தாகும் எனும் தேற்றத்தை முறையாக நிறுவுவார்.